[8th August 1960

Social Welfare workers.

*10. *Q.*—SRI A. GOVINDASAMY (on behalf of Sri M. P. SUBRAMANIAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the post of "Social Workers" has been sanctioned for every block under Community Development Programme;

(*b*) if so, the minimum educational and other qualifications prescribed for that post;

(*c*) whether there is any age-limit prescribed for that post;

(*d*) whether the selection of candidates to this post is made only from among political sufferers;

(*e*) who is the appointing authority; and

(*f*) the scale of pay for the post?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The posts of Social Welfare workers have been sanctioned for 197 blocks for the present.

(*b*) No minimum educational qualifications have been prescribed for the post. It is sufficient if they know to read and write the regional language. Political sufferers and the members of their families alone are eligible for appointment to the post.

(*c*) The upper age-limit for the post is 53.

(*d*) Yes, Sir.

(*e*) The Additional Development Commissioner is the appointing authority for the post.

(*f*) The post carries a scale of pay of Rs. 45-3-60-5-90.

SRI A. GOVINDASAMY: இந்த வேலைக்கு கல்வித் தகுதி இல்லாதவர்கள், அதாவது எழுதப்படிக்கத் தெரியாதவர்களை நியமித்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி நியமிக்கப்பட்டிருந்தால் அவர்களை வேலையை விட்டு நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா? இனிமேல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைத்தான் நான் முன்னமேயே என் பதிலில் சொல்லியிருக்கிறேன். வேலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமானால் எழுதப்படிக்கத் தெரிந்தவர் களாக இருக்க வேண்டும் என்று.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Is there any proposal to leave these appointments in the hands of the Madras Public Service Commission? If not, why?

THE HON. SRI C. SUBRAMANIAM: மற்ற உத்யோகங்களைப் போன்று இதுவும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டியதில்லை. அந்த மாதிரியான பரீட்சை இதற்குக் கிடையாது. அதனால் இது பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை.

8th August 1960]

Sri R. CHIDAMBARA BHARATHI: அரசியல் தியாகிகள் ஜனங்களுக்கு அதிகமாக உழைத்து வந்திருப்பதால் அவர்கள்தான் அந்த வேலைக்குத் தகுதியுள்ளவர்கள் என்று சர்க்கார் கருதுகிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்தக் கேள்வியைப் போல் பல கேள்விகள் வந்ததால் கலெக்டர்களிடம் கேட்கப் பட்டது. கலெக்டர்களிடமிருந்து வந்த அறிக்கையை வைத்துக் கொண்டு அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் அப்படி வந்தது. அப்படி நியமிக்கப்படுகிற வர்களும் நல்ல வேலைதான் செய்து கொண்டிருக்கிறார்கள். பொதுஜனத் தொடர்பு இருப்பதால் அவர்களுக்கு நல்ல வேலை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் அறிக்கை வந்திருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN: அப்படி பதவியில் அமைக்கக்கூடியவர்களை அவரவர்கள் இருக்கக்கூடிய ஜில்லாக் களிலேயே அமைக்கப்படவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு இருந்தும்கூட அதற்கு நேர் விரோதமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படி இருப்பது தெரிந்தால் அப்படி இருக்கக் கூடியவர்களை அவரவர்கள் ஜில்லாவுக்கே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: வேலை எங்கு இருக் கிறதோ அங்குதான் வேலை கொடுக்க முடியும். அப்படி ஏதாவது குறிப்பிட்டுச் சொன்னால் அதைப்பற்றி கவனிக்கப்படும். அதற்கு மேல் பதில் சொல்ல முடியும்.

Sri P. G. MANICKAM: அப்படி வேலைக்கு நியமிக்கப்படு கிறவர்கள் அவர்களுக்கு சமூக வேலைகளை முக்கியமாக செய்ய வேண்டியதாக இருப்பதால் அதற்காக அவர்களுக்கு பயிற்சி முகாம் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: It is a suggestion for action.

Sri A. GOVINDASAMY: சர்க்கார் குறிப்பிட்டிருக்கிற வயதைத் தாண்டியுள்ளவர்களை நியமித்திருந்தால் அப்பேர்ப் பட்டவர்களை வேலையை விட்டு நீக்குவதற்கு அரசாங்கம் முயற் சிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அவர்களை நியமிக்கும் போது அவர்களுக்கு 53-க்கு குறைவாக இருக்க வேண்டும். அதன் பிறகு அவர்களுக்கு வயது ஆகி இருப்பதைப்பற்றி கனம் அங்கத் தினர் குறிப்பிடுகிறார்போலிருக்கிறது.

Sri M. K. SOMASUNDARAM: தியாகிகளில்கூட எத்தனையோ பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் சோசியல்

வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி ஈடுபட்டிருக்கிறவர்கள் வேலை இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு வேலை கொடுக்க ஒரு திட்டத்தை அமைக்க இந்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is also a suggestion. வேலை இல்லாதவர்களுக்குத்தான் இப்பொழுது வேலை கொடுக்கிறோம்.

SRI V. SUBBIAH: அரசியல் தியாகிகளில் உண்மையிலேயே தியாகிகள் பலர் வேலைக்கு மனுச் செய்து இருந்தும் அவர்களுக்கு வேலை கிடைக்காத காரணம் என்ன ? அவர்களுக்குக் கொடுக்க காலி ஏற்படவில்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பலர் விண்ணப்பம் செய்கிறார்கள். ஒரு சிலருக்குத்தான் வேலை கொடுக்க முடியும். யார் நன்றாக வேலை செய்வார்கள் என்று பார்த்து தேர்ந்து எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அவசியம் ஏற்படுகிறது.

Maintenance of roads.

* 11. Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா வைகை அணைக்கட்டிலிருந்து ஆண்டிப்பட்டி செல்லும் P.W.D. ரோட்டையும், சின்ன மதுரையிலிருந்து செல்லும் ஹைவேஸ் எஸ்டேட் ரோட்டையும் சர்க்கார் பாராமரிப்பில் எடுத்துக்கொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No Sir. But there is a proposal to transfer the road from Vaigai Anicut to Andipatti from the Public Works Department to the Madurai District Board.

SRI N. R. THIAGARAJAN : சின்னமநல்லூரில் இருந்து செல்லும் ஹைவேஸ் ரோடு முக்கியமானதாகையால் அதையும் எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் வைகை அணைக்கட்டு ரோடில் வருஷத்திற்கு ஒருநாள் இரண்டுநாள் போவதற்குத் தடை விதிக்கப்படுகிறதே, அதையும் நீக்குவதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போதும் தடை இருப்பதாகத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரமும் சேகரித்துப் பதில் அளிக்கிறேன்.

Aid to schools adopting Montessori system

*** 12 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மாண்டிச்சேரி முறையில் இம் மாநிலத்தில் நடைபெறும் ஒவ்வொரு பள்ளிக்கும் அரசாங்கம் அளித்துவரும் உதவி என்ன?